ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2262/12 - 2022 ජනවාරි මස 10 වැනි සඳුදා - 2022.01.10

*2262/12 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் வெலிமடை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*வெலிமடை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்ற தாதலாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ், வெலிமடை பிரதேச சபையின் இலக்கம் 20-குருத்தலாவ வட்டாரத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மொஹோமட் மொஹொம்மட் நசார் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான வெலிமடை பிரதேச சபையின் இலக்கம் 20-குருத்தலாவ வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ராஜபக்ஷ வாசல முதியன்சேலாகே விஜேரத்ன பண்டார மிரஹவத்த என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் முடிவினை அறிவித்துள்ளாராத லாலும் ;*

*இப்போது, வெலிமடை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான எச். ஐ. ஆர். ஹத்துருசிங்ஹ ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) (அ) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ராஜபக்ஷ வாசல முதியன்சேலாகே விஜேரத்ன பண்டார மிரஹவத்த என்பவர் வெலிமடை பிரதேச சபையின் இலக்கம் 20-குருத்தலாவ உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**எச். ஐ. ஆர். ஹத்துருசிங்ஹ,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
வெலிமடை பிரதேச சபை.

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*பதுளை,*
*2022, சனவரி 10.*

EOG 01-0111

1A - G 35804 — 20 (2022/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*